தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
4-DEC 1979
MADRAS

திங்கட்கிழமை, 1979 மார்ச் 12.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவை மாவட்டத்திற்கு பாண்டியாறு–புன்னம்புழா நீர்

*குறுகிய கால வினா எண். 11—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு – புன்னம்புழா ஆற்றின் தண்ணீர் கோவை, அவினாசி, பல்லடம் தாலூகாக்களில் பயன்படுத்துவது குறித்து கேரள அரசின் சம்மதம் கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் நிறைவேற எத்தனை கோடி ரூபாய் செலவாகும் ?

(இ) எத்தனை லட்சம் ஏக்கர் அதனால் பயன்பெறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தமிழக அமைச்சர்கள் 19, 20-12-78 தேதிகளில் கேரள முதல்வருடன் திருவனந்தபுரத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மீண்டும் இது குறித்து பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது.

(ஆ) & (இ) : இவ் வினாக்களுக்கு **இடமில்லை.**

சஞ்சய் காந்தி வருகையின்போது ஏற்பட்ட செலவு

*வினா எண். 358—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது சென்னை நகரில் ஏற்பட்ட பெரும் வெள்ளச் சேதத்தை பார்வையிட வந்திருந்த சஞ்சய் காந்திக்காக மாநில அரசு செலவழித்த தொகை எவ்வளவு?